இந்த மொழிபெயர்க்கப்பட்ட திட்டத் தரவுத் தாள் (PDS) 29 மார்ச் 2016 திகதியிடப்பட்ட அதன் ஆங்கிலப் பதிப்பினை அடிப்படையாகக் கொண்டது.

ADB ASIAN DEVELOPMENT BANK

## இலங்கை: மின்சார விநியோக நம்பகத் தன்மையை மேம்படுத்துவதற்கு ஆதரவளித்தல்

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | மின்சார விநியோக நம்பகத் தன்மையை மேம்படுத்துவதற்கு ஆதரவளித்தல் |
| திட்டத்தின் இலக்கம் | 49216-001 |
| நாடு | இலங்கை |
| திட்டத்தின் நிலை | ஒப்புதலளிக்கப்பட்டது |
| திட்ட வகை/ உதவி நடைமுறை | தொழில்நுட்ப உதவி |
| நிதியிடல் மூலம்/ தொகை | **TA 8952-SRI: மின்சார விநியோக நம்பகத் தன்மையை மேம்படுத்துவதற்கு ஆதரவளித்தல்**<br>தொழில்நுட்ப உதவி சிறப்பு நிதி US$ 225,000.00 |
| மூலோபாய செயற்பட்டியல் | சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான வளர்ச்சி<br>உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி |
| மாற்றத்திற்கான இயக்கிகள் | ஆளுகை மற்றும் திறன் மேம்பாடு<br>கூட்டாண்மை |
| துறை / உபதுறை | **எரிசக்தி** - மின்சாரப் பரிமாற்றம் மற்றும் விநியோகம் - எரிசக்தித் திறன் மற்றும் பாதுகாப்பு - புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பிறப்பாக்கம் - சூரியசக்தி - புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பிறப்பாக்கம் - காற்று |
| பாலின சமத்துவம் மற்றும் பெருவோட்டத்தில் இணைதல் | சில பாலின மூலகங்கள் |
| விவரணம் | இலங்கை அரசாங்கத் துறை அபிவிருத்திக் கட்டமைப்பு எரிசக்தி வளங்களின் நிலையான அபிவிருத்தி, முழு மக்கள் தொகைக்கும் எரிசக்திச் சேவைகளின் பயன்பாடு மற்றும் அணுகலை இயலச்செய்தல், மற்றும் ஒரு போட்டி விலையில் அந்தச் சேவைகளின் நம்பகமான விநியோகம் என்பவற்றை நோக்குகின்றது. மின்சாரத்திற்கான அணுகலை அதிகரிப்பதற்கு மற்றும் போதுமான அளவு குறைந்த செலவில் ஏற்றுக் கொள்ளக்கூடிய நம்பகத் தன்மையுடன் வளர்ச்சி வாய்ப்புகளிற்கான அணுகலை விரிவுபடுத்துவதற்கும் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்குந் தன்மையை அடைந்து வளர்ந்து வரும் மின்சாரத்திற்கான தேவையை ஈடுசெய்வதற்கும், அரசாங்கம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களின் பங்கினை உயர்த்துதல் ஊடாக (எ.கா. நீர், காற்றும், சூரியசக்தி முதலியன), பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்புகளின் மொத்தத் தொழில்நுட்ப மற்றும் வர்த்தக |

| | |
|---|---|
| | இழப்புக்களைக் குறைத்தல், மற்றும் எரிசக்தி வினைத்திறன் மற்றும் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளல் உட்பட, தொகுதியின் வழங்கற் திறனை அதிகரிப்பதற்கு திட்டமிடுகின்றது. இந்தத் திட்டங்களுக்கு ஆதரவாக முதலீட்டுத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு, ஆசிய அபிவிருத்தி வங்கியினால் பரிசீலிக்கப்படுவதற்கு ஒரு பொருத்தமான முதலீட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு ஒரு திட்ட ஆயத்தத் தொழில்நுட்ப உதவி தேவையாக இருக்கின்றது. |
| திட்டத்தின் காரண விளக்கமும் நாடு/ பிராந்திய மூலோபயத்திற்கான தொடர்பு | சமீபத்திய ஆண்டுகளில், இலங்கை அதன் எரிசக்தித் துறையில் முன்னேற்றம் கண்டிருப்பதுடன், 1990 ஆம் ஆண்டில் 29% உடன் ஒப்பிடும் போது 98% (2015) என்ற ஒரு தேசிய மின்மயமாக்கல் விதிதத்தை அடைந்திருக்கின்றது. மீதமாகவுள்ள 2% திற்கு மின்சாரம் வழங்குவதனை நிறைவேற்றுவது மிகவும் கடினமானதாக இருப்பதுடன் அது பிரதானமாக அபிவிருத்தி குறைந்த மற்றும் நாட்டைச் சூழவுள்ள சிறிய தனிமைப்படுத்தப்பட்ட தீவுகளில் உள்ளது. மின்மயமாக்கலில் சில மாகாணங்கள் 100% இனை அடைந்திருந்த போதிலும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்கள் 92% மற்றும் 94% மின்மயமாக்கலைக் கொண்டிருந்ததுடன், ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்கள், இந்த நிலைக்கு நன்கு பின்தங்கிய பல மாவட்டங்களுடன் 95% இனை அடைந்திருந்தன. தொடர்பற்று அல்லது தரம் குறைந்த மின்சார விநியோகத்தைக் கொண்டிருக்கும் ஏழைக் குடும்பங்கள் பலவற்றைக் கொண்டிருக்கும் கிராமப்புறப் பகுதிகளுக்கு அமைப்பின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் மின்சார விநியோகத்தை விரிவாக்குவதற்கும் 33 கிலோவோற்று (KV) நடுத்தர மின்னழுத்த வலையமைப்பிற்கு மேலும் மேம்பாடு தேவையாக உள்ளது. மின் கட்டமைப்பை விரிவாக்குவதன் ஊடாக மின்சாரம் வழங்கப்பட முடியாத 1,250 இலிருந்த 4,540 வரை மக்கள் தொகை கொண்ட சில சிறிய தனிமைப்படுத்தப்பட்ட தீவுகள் உள்ளன. இவற்றிற்குத் தற்போது வினைத்திறனற்ற, பழமையான டீசல் மின் பிறப்பாக்கி இயந்திரங்களினால் விலையுயர்ந்த மின்சாரம் மின்மயமாக்கல் விகிதம் 0% இலிருந்து 74% வரையான நாளொன்றிற்கு வரையறுக்கப்பட்ட மணித்தியாலங்களுக்கு வழங்கப்படுகின்றது.<br><br>மின் விநியோகத் தொகுதிகளை மேம்படுத்துவதன் ஊடாக முழு மக்கள் தொகைக்கும் மின்சார சேவைகளுக்கான அணுகலை உத்தரவாதப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் எரிசக்தி வளங்களின் நிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இலங்கை தேசிய எரிசக்தி கொள்கை மற்றும் மூலோபாயங்களை (NEPS) அடிப்படையாகக் கொண்ட துறைசார் முதலீடுகள் உள்ளிட்ட ஒரு தேசிய முதலீட்டுத் திட்டத்தைக் கொண்டிருக்கின்றது. தேசிய எரிசக்திக் கொள்கை மற்றும் மூலோபாயங்கள் ஒரு துறைத் திட்டத்தையும், ஒரு நீண்டகால முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம், மற்றும் பொருத்தமான மறுசீரமைப்பு நடவடிக்கைகளை உள்ளடக்குகின்றது. நாட்டின் தற்போதைய நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறன் 3,932 மெகாவாட் (MW) ஆக இருப்பதுடன் அது 12,357 ஜிகாவாட் - மணித்தியாலங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றது (2014). உச்சத் தேவை 2,152 மெகாவாட் ஆகும் (2014). மின்சார விநியோகத்தை மேலும் விரிவாக்கப் போதுமான அளவு மின் பிறப்பாக்கத் திறன் உள்ளது. அரசாங்கம் பிரதான தீவில் மின் கட்டமைப்பு மூலமாகவும் சிறிய தனிமைப்படுத்தப்பட்ட தீவுகளில் சிறிய - மின் கட்டமைப்புத் தொகுதிகள் ஊடாகவும் மக்கள் தொகைக்கு மின்சாரத்தை வழங்க உத்தேசித்துள்ளது. தூய எரிசக்தி மேம்பாடு மற்றும் மின்சாரத்திற்கான அணுகலை விரிவாக்கும் அரசாங்கத்தின் குறிக்கோளுக்கு |

| | |
|---|---|
| | இத் திட்டம் பங்களிப்புச் செய்யும்.<br><br>இத் திட்டம் பின்தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்திக்கு நேரடியாக நன்மை பயக்கும். இத் திட்டம் 116 கிராமிய மின் திட்டங்களையும் 2,150 கிலோ மீற்றர்கள் குறைந்த மின்னழுத்த விநியோக விரிவாக்கத்தையும் உள்ளடக்குகின்றது. காற்று- சூரிய சக்தி மற்றும் வினைத்திறனான டீசல் மின் பிறப்பாக்க முறைமைகளுடன் இணைந்த மின்சக்தி சேமிப்பைக் (லிதியம்- அயன் கலங்கள்) கொண்டிருக்கும் புதுமையான கலப்பின சிறிய மின் கட்டமைப்புகள், சிறிய தனிமைப்படுத்தப்பட்ட தீவுகளில் செயற்படுத்தப்படும். இதன் விளைவாக, அனைத்து மக்கள் தொகையினருக்குமான உள்ளடக்கிய மின்சாரத்திற்கான அணுகல் உறுதிப்படுத்தப்படுவதற்கு இத் திட்டம் உதவுகின்றது. மொத்தத்தில், இத் திட்டம் மோதலினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்கள் அத்துடன் நாட்டின் ஏனைய பகுதிகளை விட தற்போதைய மின்மயமாக்கல் மட்டம் குறைவாகவுள்ள ஊவா மற்றும் வட மத்திய மாகாணங்கள் உட்பட, சுமார் 17,500 கிராமப்புற வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இத் திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான, நாட்டின் இடைக்கால கூட்டு மூலோபாயத்துடன் இசைவானதாக உள்ளது. தூய மற்றும் நம்பகமான மின்சாரம், மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டிற்கான அணுகலை விரிவாக்கும் பரிமாற்றம் மற்றும் முதலீடுகளுக்கு உதவியளிப்பதில் கவனம் செலுத்தும் முன்னைய ஆசிய அபிவிருத்தி வங்கித் தலையீடுகள் மீது இது பலமான ஆதாரங்களைக் கொண்டிருக்கின்றது. |
| தாக்கம் | |
| **திட்ட விளைவு** | |
| விளைவின் விவரணம் | |
| விளைவு நோக்கிய முன்னேற்றம் | |
| **அமுலாக்கின் முன்னேற்றம்** | |
| திட்ட வருவிளைவுகள் பற்றிய விவரணம் | |
| அமுலாக்க முன்னேற்றத்தின் நிலை (வருவிளைவுகள், நடவடிக்கைகள், மற்றும் பிரச்சினைகள்) | |
| பூகோளம்சார் அமைவிடம் | |
| **சுற்றுச்சூழல் மற்றும் சமுதாயம் சார்ந்த பார்வைகளின் சுருக்கம்** | |
| சுற்றுச்சூழல்சார்ந்த பார்வைகள் | |
| தன்னிச்சையற்ற மீள்குடியேற்றம் | |
| சுதேச மக்கள் | |
| **பங்குதாரர் தொடர்பு, பங்குபற்றல், மற்றும் ஆலோசனை** | |
| திட்ட வடிவமைப்பின் போது | PPTA இன்போது வடிவமைப்புக் கட்டம் பூராகவும் பங்குதாரர்கள் கலந்தாலோசிக்கப்படுதல் மற்றும் சமூகங்கள் மற்றும் வறிய மக்களைப் பாதிக்கும் சமூக மற்றும் பிற பிரச்சினைகள், சுற்றுச்சூழல் சார்ந்தவை உட்பட, தொடர்பான பிரச்சினைகளின் திட்ட அமுலாக்கத்தினை |

| | |
|---|---|
| | உறுதிப்படுத்துதல். |
| திட்ட அமுலாக்கத்தின் போது | பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் உள்ளூர் சமூகங்கள், உள்ளூர் அதிகார சபைகள், கவனக் குழுக்கள், குடிசார் சமூகக் குழுக்கள், மற்றும் உள்ளூர் அமைப்புக்கள், அனைத்துப் பொருத்தமான பங்குதாரர்களும் அடையாளம் காணப்பட்டு PPTA இன் அமுலாக்கம் மற்றும் தொடரும் திட்டம் பூராகவும் கலந்தாலோசிக்கப்படுவர். |

**வியாபார வாய்ப்புக்கள்**

| | |
|---|---|
| ஆலோசனைச் சேவைகள் | 2 சர்வதேச தனிப்பட்ட ஆலோசகர்களை மொத்தமாக 4- நபர் மாதங்கள் மற்றும் 6 தேசிய தனிப்பட்ட ஆலோசர்களை மொத்தமாக 15 நபர்-மாதங்களுக்கும் ஈடுபடுத்த எதிர்பார்கப்படுகின்றது. ஆலோசகர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அதன் கடன்பெறுனர்களின் ஆலோசகர்களின் பயன்பாடு தொடர்பான வழிகாட்டிகளைப் (2013, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறு) பின்பற்றி ஆலோசகர்கள் ஆட்சேர்க்கப்படுவர். |
| கொள்வனவு | திட்டத்தின் கீழான அனைத்துக் கொள்வனவுகளும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொள்வனவு வழிகாட்டிகளிற்கு (2015, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறு) இணங்க மேற்கொள்ளப்படும். |

**பொறுப்பான பணியாளர் குழாம்**

| | |
|---|---|
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கி அலுவலர் | முக்தோர் காமுதஹூநொவ் |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கி திணைக்களம் | தெற்கு ஆசியத் திணைக்களம் |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு | எரிசக்திப் பிரிவு, தெற்கு ஆசியத் திணைக்களம் |
| நிறைவேற்று முகவர்கள் | **சக்தி வலு அமைச்சு (MOPE)**<br>72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை<br>கொழும்பு – 01<br>இலங்கை |

**கால அட்டவணை**

| | |
|---|---|
| எண்ணக்கரு அனுமதி | - |
| உண்மை அறிதல் | - |
| MRM | - |
| ஒப்புதல் | 14 செப்தெம்பர், 2015 |
| கடந்த மீளாய்வுப் பணி | - |
| கடந்த PDS புதுப்பிப்பு | 21 மார்ச் 2016 |

தொழில்நுட்ப உதவி TA 8952-SRI

**இலக்குக் கட்டங்கள்**

| **ஒப்புதல்** | **ஒப்பமிடற் திகதி** | **நடைமுறைப்படுத்தற் திகதி** | **நிறைவு** | | |
|---|---|---|---|---|---|
| | | | **மூலம்** | **திருத்தப்பட்டது** | **உள்ளபடியான நிலை** |
| 14 செப்தெம்பர் 2015 | - | 14 செப்தெம்பர் 2015 | 31 மே 2016 | - | - |

**நிதியிடற் திட்டம்/ தொழில்நுட்ப உதவிப் பயன்பாடு** **திரட்டிய கடன் கொடுப்பனவுகள்**

| ADB | இணை நிதியிடல் | சரிநிரப்புக்கூறு | | | | மொத்தம் | திகதி | தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | அரசு | பயனாளிகள் | திட்ட அநுசரணையாளர் | ஏனையோர் | | | |
| 225,000.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 225,000.00 | 14 செப்தெம்பர் 2015 | 97,027.00 |

திட்டத் தரவுத் தாள்கள் (PDS) திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் சுருக்கமான தகவலைக் கொண்டிருக்கின்றன: திட்டத் தரவுத் தாள் செயல்நிலையிலுள்ள வேலையாக இருப்பதனால், சில தகவல் இதன் முதற் பதிப்பில் உள்ளடக்கப்படாதிருக்கலாம் ஆனால் அது தோன்றும் போது சேர்க்கப்படும். முன்மொழியப்பட்ட திட்டங்கள் பற்றிய தகவல் தற்காலிகமானதாகவும் குறிப்பானதாகவும் உள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இந்தத் தகவல் தரவுத் தாளில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவலை அதன் பயனர்களுக்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு வளமாக மட்டும் வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி உயர் தரமான உள்ளடக்கத்தினை வழங்க முயற்சிக்கும் அதே நேரத்தில், வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ வியாபார உத்தரவாத வரையறைகள் இல்லாமை உட்பட, எந்த வகையான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குப் பொருந்துமாறு உள்ளபடி வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பாக, அவ்வாறான எந்தத் தகவலினதும் துல்லியம் மற்றும் பூரணத்துவம் பற்றி எந்தவித உத்தரவாதங்களையோ அல்லது பிரதிநிதிததுவங்களையோ மேற்கொள்ளவில்லை.